©
தமிழ்நாடு அரசு
2009

**கையெழுத்துத் தொடர்**

# நிதி (ஊதியப் பிரிவு)த்துறை

## அரசு ஆணை நிலை எண். 10, நாள் : 13—1—2009

(மார்கழி–29. திருவள்ளுவர் ஆண்டு, 2039)

இடைக்கால நிலுவைத் தொகை –– அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயித்தல் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரையினைச் செயற்படுத்துதல் முடிவடையாத நிலையில் –– இடைக்கால நிலுவைத் தொகை வழங்குதல் ––ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்கவும்:

1. அ.ஆ. நிலை எண். 358, நிதி (ஊபி)த்துறை, நாள்:20—8—2008.
2. அ.ஆ. நிலை எண். 496, நிதி (ஊபி)த்துறை, நாள்:17—11--2008.

– – – – –

**ஆணை :**

மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மீது மைய அரசு எடுத்துள்ள முடிவுகளின் அடிப்படையில் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கு திருத்திய ஊதியம் மற்றும் இதர படிகள் நிர்ணயிப்பது குறித்து ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை வழங்க ஒரு அலுவலர் குழு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட ஆணையில் அமைக்கப்பட்டது. திருத்திய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால சலுகைகள் வழங்குவது குறித்தும் பரிந்துரைக்குமாறு அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், இவை தொடர்பான பரிந்துரைகளை மூன்று மாத கால அவகாசத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்குமாறு அலுவலர் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. பின்னர், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அலுவலர் குழுவின் பதவிக் காலத்தினை 19—11—2008ஆம் நாளைத் தொடர்ந்து மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2) அலுவலர் குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கால அவசாசம் தேவைப்படுவதனைக் கருத்தில் கொண்டு இடைக்கால நிலுவைத் தொகை வழங்க அலுவலர் குழு பரிந்துரைத்தது.

3) அலுவலர் குழுவின் இப்பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்றுக்கொண்டு, திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயித்தல் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரையினைச் செயற்படுத்துதல் முடிவடையாத நிலையில் முறையான கால சம்பள ஏற்ற முறையில் உள்ள அரசு அலுவலர்கள் / ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், சிறப்பு காலமுறை ஊதிய விகிதங்கள் / வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களில் உள்ள அலுவலர்கள், தொகுப்பூதியம், நிலையான ஊதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகை கீழே குறிப்பிட்டுள்ளவாறு வழங்க ஆணையிடுகிறது :

/த.பி.பா./

(அ) 1—1—2009 அன்று முறையான காலமுறை ஊதிய விகிதங்கள் அல்லது சிறப்பு காலமுறை ஊதிய விகிதங்கள் / வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்கள் அல்லது தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஊதிய விகிதத்திலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஊதிய விகிதத்திலோ 1—1—2009 அன்று குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகாலம் பணிமுடித்த அனைத்து அலுவலர்களுக்கும் 1—1—2009 அன்று அவர்கள் பெறும் ஊதியத்தின் அடிப்படையில் இடைக்கால நிலுவைத் தொகையாக மூன்று மாத அடிப்படை ஊதியம் + அகவிலை ஊதியம் + அகவிலைப்படி + தனி ஊதியம் (இருப்பின்) வழங்கப்படும்.

(ஆ) 1—1—2009 அன்று இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்துள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 1—1—2009 அன்று அவர்கள் பெறும் ஊதியத்தின் அடிப்படையில் இடைக்கால நிலுவைத் தொகையாக ஒரு மாத அடிப்படை ஊதியம் + அகவிலை ஊதியம் + அகவிலைப்படி + தனி ஊதியம் (இருப்பின்) வழங்கப்படும்.

(இ) 1—1—2009 அன்று குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியத்தில் பணிபுரிந்துள்ள அலுவலர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகையாக 1—1—2009 அன்று அவர்கள் பெறும் மொத்த ஊதியத்தில் மூன்று மாத ஊதியம் வழங்கப்படும்.

(ஈ) தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியத்தில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்துள்ள அலுவலர்களுக்கு இடைக்கால நிலுவைத் தொகையாக 1—1—2009 அன்று அவர்கள் பெறும் மொத்த ஊதியத்தில் ஒரு மாத ஊதியம் வழங்கப்படும்.

4) பல்கலைக் கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக்குழுவின் ஊதிய விகிதங்களில் உள்ள ஆசிரியர்களின் ஊதியத்தை மைய அரசு திருத்தி அமைத்துள்ளது. நீதிமன்றம் சார்ந்த சார்நிலைப் பணியில் உள்ள அலுவலர்களின் ஊதிய விகிதங்களும் மைய அரசின் ஆணையினைத் தொடர்ந்து திருத்தி அமைக்கப்பட உள்ளது. ஆகவே, மேலே பத்தி 3 (அ) மற்றும் (ஆ)—ல் ஆணையிடப்பட்டுள்ளவாறான இடைக்கால நிலுவைத் தொகை பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக்குழுவின் ஊதிய விகிதங்களில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் நீதிமன்றம் சார்ந்த சார்நிலைப் பணியில் உள்ள அலுவலர்களுக்கும் பொருந்தும்.

5) இவ்வாணைகள் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவன அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

6) மேலே பத்தி–3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இடைக்கால நிலுவைத் தொகை அலுவலர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பின்னர் வெளியிடப்படும் அரசாணையின்படி வழங்கப்பட உள்ள மொத்த நிலுவைத் தொகையில் சரிக்கட்டப்படும்.

7) மேலே பத்தி–3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் சம்மந்தப்பட்ட கணக்குகளின் கீழ் உள்ள பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு மற்றும் சிறு தலைப்புகளின் கீழ் உள்ள 01. சம்பளம், 01. அடிப்படைச் சம்பளம் அல்லது 02. ஊதியங்களின் கீழ் பற்று வைக்கப்படும்.

8) 2008—09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினத்தை சம்மந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் 2008—09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு / இறுதி துணை மதிப்பீட்டில்

....../ 3 /

சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினத் தொகையினை 2008–09ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு / இறுதி துணை மதிப்பீட்டின் கருத்துருவில் சேர்க்குமாறு அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள் / துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9) மேற்கூறிய இடைக்கால நிலுவைத் தொகையினை அலுவலர்களுக்கு உடனடியாக 2009ஆம் ஆண்டு சனவரி மாத ஊதியம் வழங்குவதற்கு முன்பாக பெற்று வழங்க ஆணையிடப்படுகிறது. இடைக்கால நிலுவைத் தொகை வழங்குவது குறித்து சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர் சமர்ப்பிக்கும் பட்டியல் சரியாக இருப்பின் 2009ஆம் ஆண்டு சனவரி மாத சம்பள பட்டியலை சமர்ப்பிக்க வலியுறுத்தாமல் அனுமதிக்குமாறு சம்பள கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் மற்றும் சார்நிலை கருவூல அலுவலர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

10) மேற்கூறிய அலுவலர்களுக்குச் சேரவேண்டிய இடைக்கால நிலுவைத் தொகையினை உடனடியாக பெற்று வழங்குமாறு சம்பந்தப்பட்ட சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இது குறித்து தனியாக பதிவேடு துவக்கி அப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். அதே நேரத்தில் இடைக் கால நிலுவைத் தொகை வழங்கப்பட்டது குறித்து தனியர்களின் பணிப்பதிவேட்டிலும் உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்,
செயலாளர், சட்டமன்றபேரவைச் செயலகம், சென்னை–9.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
அனைத்து செயலகத் துறைகள்.
சட்டப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை),
சென்னை–18. (பெயரில்)
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (சி.ஏ.பி), சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
தமிழ்நாடு அனைத்து பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள்.
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை–18.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/மாவட்ட நீதிபதிகள்/
முதன்மை நீதித்துறை மாஜிஸ்ரேட்டுகள்.

/த.பி.பா./

ஓய்வூதிய இயக்குநர், 3–வது பிளாக், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் / துணை கருவூல அலுவலர்கள்.
தலைமை அரசுத்துறை நிறுவனத் தணிக்கையாளர், சென்னை–2.
மாநகராட்சி ஆணையர், சென்னை/ மதுரை/ கோயம்புத்தூர்/ திருச்சிராப்பள்ளி /சேலம் /திருநெல்வேலி/ஈரோடு/ தூத்துக்குடி/ திருப்பூர்/வேலூர்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மூன்றாவது திட்டம், சென்னை – 113.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.
அனைத்து வருவாய் கோட்டஅலுவலர்கள் / கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் / வட்டாச்சியர்கள்/ வட்டார வளர்ச்சி அலுலலர்கள் /
அனைத்து நகராட்சி / ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.